## தேசிய செய்திகள்

**கோரக்பூரில் உள்ள கீதா அச்சகத்திற்கு காந்தி அமைதி பரிசானது அறிவிக்கப்பட்டுள்ளது.**

- பிரதமர் தலைமையிலான ஜூரி அமைப்பானது 2021 ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி பரிசானது கோரக்பூரில் உள்ள கீதா அச்சகத்தில் வழங்க ஜூன் 18 அன்று அறிவித்துள்ளது.
- அகிம்சை மற்றும் பிற காந்திய முறைகள் மூலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்திற்கான சிறந்த கருத்து பங்களிப்பை மக்களிடையே பரப்பியதாக இந்த விருந்தானது வழங்கப்படுகிறது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. கலாச்சார அமைச்சகத்தால் இந்த விருதானது வழங்கப்படும் மற்றும் இந்த விருதுக்கு ஒரு கோடி ரூபாய் பணமும் பாராட்டுப் சான்றிதலும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநில செய்திகள்

**தேசிய யோகா ஒலிம்பியாட் ஆனது மத்திய பிரதேசத்தில் ஏற்பாடு செய்ய திட்டம்.**

- தேசிய யோகா ஒலிம்பியாட் ஆனது மத்திய பிரதேசத்தில் உள்ள ஜபல்பூரில் 9 வது சர்வதேச யோகாவின் முக்கிய மாநாட்டை ஜூன் 21 அன்று நடத்த மத்திய அரசானது திட்டமிட்டுள்ளது.
- இந்த தேசிய யோகா ஒலிம்பியாட் போட்டியை போபாலில் கவர்னர் மங்கு பாய் படேல் ஜூன் 18 அன்று தொடங்கி வைத்துள்ளார். மேலும் தேசிய யோகா ஒலிம்பியாட் ஆனது தேசிய தலைநகர் டெல்லிக்கு வெளியே நடத்துவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மாணவர்களின் கணிதத் திறனை மேம்படுத்துவதற்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் உ.பி அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.**

- உத்தர பிரதேச மாநில அரசானது கிட்டத்தட்ட 48,000 அரசால் நடத்தப்படும் பள்ளிகளில் "ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கணித கற்றல் திறனை" மேம்படுத்துவதற்காக புகழ்பெற்ற தனியார் நிறுவனமான கான் அகாடமி இந்தியா- உடன் ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.
- இந்த திட்டம் மூலம் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் உட்பட அனைத்திலும் "அடிப்படைக் கல்வித் துறையில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்தி மற்றும் ஆங்கில மொழியில் உயர்தர கணிதக் கற்றல்" வளத்தை வழங்க முடியும் என உத்திரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

**கேரளா ஸ்டார்ட்-அப் திட்டத்தின் (KSUM) முதல் முடிவிலி மையம் துவக்கம்.**

- கேரள முதல்வர் பினராயி விஜயன் ஜூன் 18 அன்று துபாயில் கேரளா ஸ்டார்ட் - அப் திட்டத்தின் (KSUM) முதல் முடிவிலி மையத்தைத் திறந்து வைத்துள்ளார்.
- புதிய ஸ்டார்ட் - அப் நிறுவனங்களின் மூலம் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக உலகம் முழுவதும் ஒரே இலக்குகளை அமைப்பதை நோக்கமாக கொண்டு இந்த மையமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

**வில்வித்தை உலகக் கோப்பை 2023 இல் இந்திய வில்வித்தை வீரர் தங்கம் வென்றார்.**

- கொலம்பியாவின் மெடலின் நகரில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான வில்வித்தை உலகக் கோப்பை தொகுதி 3ல் ஆடவர் பிரிவின் கீழ் தனிநபர் இறுதிப் போட்டியில் இந்திய வில்வித்தை வீரரான அபிஷேக் வர்மா தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஜூன் 18 அன்று நடைபெற்ற இறுதி போட்டியில் அபிஷேக் 148-146 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவின் வீரரான ஜேம்ஸ் லூட்ஸை தோற்கடித்து இந்திய பதக்க பட்டியலில் இரண்டாவது தங்கத்தை பெற்று தந்துள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும்.

**நாட்டிங்ஹாம் ஓபன் இறுதிப் போட்டியில் ஆண்டி முர்ரே 2வது முறையாக "புல்-கோர்ட்" பட்டத்தை வென்றுள்ளார்.**

- நாட்டிங்ஹாம் ஓபன் இறுதிப் போட்டியில் உலக புகழ்பெற்ற ஆண்டி முர்ரே 6-4, புள்ளி கணக்கில் ஆர்தர் கசாக்ஸை தோற்கடித்து இரண்டாவது நேராக புல்-கோர்ட் பட்டத்தை 2023 விம்பிள்டனுக்கு முன்னதாகவே வென்றுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம் மீண்டும் விம்பிள்டன் போட்டியிலும் சிறப்பாக விளையாடி சாம்பியன் பட்டத்தை பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் 2வது முறையாக இன்டர்காண்டினென்டல் கோப்பையை வென்றுள்ளது.**

- ஒடிஷாவின் தலைநகரமான புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் லெபனான் நாட்டின் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்திய அணியானது வரலாற்றின் இரண்டாவது முறையாக இன்டர்காண்டினென்டல் கோப்பையை வென்றுள்ளது.
- 2019ல் நடந்த இந்த போட்டியின் முந்தைய பதிப்பில் இந்தியா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது மற்றும் இந்த ஆட்டத்தில் 46வது நிமிடத்தில் சுனில் சேத்ரி இந்திய அணியின் கோலை அடித்ததன் மூலம் நட்சத்திர ஆட்டத்தை துவங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Examsdaily

**இந்தோனேசியா ஓபன் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.**

- ஜூன் 18 2023இல் நடைபெற்ற இந்தோனேசியா ஓபன் போட்டியில் ஆடவர் இரட்டையர் பட்டத்தை சிராக் ஷெட்டி மற்றும் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி ஆகியோர் பெற்றுள்ளனர்.
- இந்த ஜோடியானது மலேசியாவின் சோ வூய் யிக் மற்றும் ஆரோன் சியா ஆகியோருக்கு எதிரான போட்டியில் வரலாற்று வெற்றி பெற்றனர் மேலும் இதன் மூலம் இந்த ஜோடியானது BWF உலக தரவரிசையில் 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஸ்குவாஷ் உலகக் கோப்பையை எகிப்து அணியானது வென்றுள்ளது.**

- ஜூன் 17 அன்று தமிழகத்தின் சென்னையில் உள்ள எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் நடந்த SDAT-WSF ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டியில் எகிப்தின் அணியானது வென்றுள்ளது.
- இந்த இறுதிப் போட்டியில் நான்காவது இடத்தில் உள்ள மலேசியாவை 2-1 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இந்த கோப்பையை எகிப்து கைப்பற்றியது. மேலும் கடந்த 2011-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பையை எகிப்து வென்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**முக்கிய தினம்**

**உலக அகதிகள் தினம் 2023**

- மோதல் மற்றும் துன்புறுத்தலுக்குப் பிறகு அகதிகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் அவர்களின் வாழ்க்கையை மறுதொடக்கம் செய்வதில் அவர்களுக்கு ஆதரவளிப்பு முயற்சியை உலகிற்கு எடுத்துரைப்பதாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன்20 அன்று உலக அகதிகள் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- hope away from home என்பது இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும்.

Exmsdaily